# ஒன்டேரியோவில் மனித உரிமையும் கர்ப்ப நிலையும்

ஒன்டேரியோ *மனித உரிமை சட்டத்தொகுப்பின் கீழ்*, ஒரு பெண் கர்ப்பமாக உள்ளதாலோ, கர்ப்பமாக இருந்ததாலோ, குழந்தை பெற்றிருந்ததாலோ அல்லது கர்ப்பமடையகூடியதாலோ பாகுபாடு காட்டப்படுதல் சட்டமுரணானதாகும். மனித உரிமை பாதுகாப்புகள் வேலையிடம், சேவைகள் மற்றும் துணைநலங்கள், மற்றும் குடியிருப்பு வரை நீடிக்கிறது.

## பணியிடத்தில்

### நேர்முக பேட்டிகள்

வேலைத்தேர்வு பேட்டிகளில் "நீங்கள் கர்ப்பமானவரா?", "உங்களுக்கு ஒரு குடும்பம் உள்ளதா?" அல்லது “நீங்கள் ஒரு குடம்பம் ஏற்படுத்த திட்டமிடுகிறீர்களா?” என்ற கேள்விகளை வேலைக்கு அமர்த்துபவர் கேட்பது சட்டமுரணானதாகும்.

### வேலையில் இருக்கையில்

நீங்கள் கர்ப்பமாக உள்ளதாலோ அல்லது கர்ப்பமடையகூடியதாலோ வேலையிலிருந்து நீக்கவோ, நிலை தாழ்த்தவோ அல்லது வேலையற்றி செய்வதோ (முன் அறிவிப்பு இருந்தாலும்கூட) சட்டமுரணானதாகும்.

வேலையிடத்தில் நீங்கள் கர்ப்பமாக உள்ளப்போதோ அல்லகு கர்ப்பமடையகூடியதாக இருந்தாலும் நியாயமாக நடத்தப்படுவதற்கு உரிமையுண்டு. உங்கள் வேலையை வைத்திருக்கவும், உங்களை வேலையுயர்வு, பயிர்சி, சவாலான செய்திட்டங்கள் அல்லது கர்பபம் நிறைந்தப்பின் பணிக்குத்திரும்புவதிலிருந்து நிராகரிக்காமல் இருப்பது உங்கள் உரிமையாகும்.

### உங்கள் தேவைகள்

கர்ப்பம் தரிக்க விரும்புவதாலோ, கர்ப்பமாக இருப்பதாலோ அல்லது சற்று முன்னரே குழந்தை பெற்றெடுத்ததாலோ உங்களுக்கு விசேஷ தேவைகள் இருக்கலாம். கர்ப்ப சம்மந்தமான விசேஷ தேவைகள் கொண்ட பெண்களுக்கு வேலைக்கு வைப்பவர்கள் உதவியாக இருக்க வேண்டும். இதன் பெயர் “அக்காமடேஷன்”.

உங்கள் உடல்நலத்திற்காக வேலைக்கு வைப்பவர்கள் உங்கள் உத்தியோகக் கடமைகளை மாற்றவேண்டும் அல்லது விதிகளை மட்டுப்படுத்தவேண்டும். இவற்றில் உங்கள் வேலையில் அல்லது ஷிப்ட் நேரங்களில் மாற்றம், வேலை நாள் பொழுது இடைவேளை அளிப்பது, மற்றும்/அல்லது விசேஷ உடல்நல தேவைகள் அல்லது பிற தேவைகளுக்காக நேரம் அளிப்பது போன்றவை உள்ளடங்கும். மருத்துவ காரணங்களால் உங்களுக்கு இந்த வேலை அல்லது நேர மாற்றங்கள் தேவைப்படுவதற்கான சாட்சீயத்தை உங்கள் வேலைக்கு வைப்பவர் கேட்க அனுமதி உண்டு.

நீங்கள் கர்ப்பமாக இருக்கும்பொழுது உங்களை தகுந்த மாதிரி நடத்த இயலாது எனக் கோறும் வேலைக்கு வைப்பவர், *இச்சட்டத்தொகுப்பின் கீழ்* “அளவு கடந்த கஷ்டத்தை” நிரூபிக்கவேண்டும். அதாவது உங்கள் கர்ப்பத்துக்கு உடல்நல அல்லது பாதுகாப்பு அபாயம் உள்ளதாக, அல்லது உங்கள் விசேஷத் தேவைகளை பூர்த்தி செய்வது வியாபாரம் நடத்துவதையே பாதிக்கும் அளவுக்கு செலவு அதிகமாகும் என நிரூபிக்கவேண்டும் .

நீங்கள் *எம்ப்ளாய்மென்ட் ஸ்டான்டர்ட்ஸ் ஆக்டின்* கீழும் பாதுகாக்கப்படுகிறீர்கள். எம்ப்ளாய்மென்ட் ஸ்டான்டர்ட்ஸ் ஆக்டின் கீழ் **கர்ப்ப நிலை விடுமுறை** 17 வாரங்களாகும், அதனை உடனே அடுத்து 35 வாரங்கள் பெற்றார் விடுமுரையாகும், அல்லது கர்ப்ப நிலை விடுமுறை எடுக்கப்படாவிட்டால் பெற்றார் விடுமுரை ஒதுக்கம் 37 வாரங்கள் ஆகும். நீங்கள் எப்பொழுது உங்கள் தாய்மை விடுமுறையை தொடங்கவேண்டும் என்று உங்கள் வேலையில் வைப்பவர் சொல்லமுடியாது. உங்கள் உடல்நலம் அனுமதிக்குமளவு, உங்கள் வேலையில் வைப்பவர் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய இயலவில்லை என்றால் ஒழிய நீங்கள் உங்கள் குழந்தை பிறக்கும்வரை பணிபுரியலாம்.

கர்ப்பகால விடுமுரை மற்றும் எம்ப்ளாய்மென்ட் ஸ்டான்டர்ட்ஸ் ஆக்ட் பற்றிய விவரமான தகவலுக்கு, நீங்கள் ஊழிய அமைச்சகத்தின் **எம்ப்ளாய்மென்ட் ஸ்டான்டர்ட்ஸ் கிளையையும்** அனுகலாம் அல்லது கட்டணமில்லாமல் மாநிலமுழுதும் 1-800-531-5551 என்ற எண்ணை அழைக்கலாம். தாய்மை சார்ந்த உதவிநன்மைகளை பற்றிய தகவலுக்கு அனுகுங்கள் **ஹ்யூமன் ரிஸோர்ஸஸ் டிவெலப்மென்ட் கானடா** அல்லது ஆங்கிலத்தில் சேவைக்கு அழையுங்கள் 1-800-277-9914.

## சேவைகள் மற்றும் துணைநலங்கள்

உணவகங்கள், கடைகள் மற்றும் மால்கள் மற்றும் பூங்காக்கள் போன்ற பொது இடங்கள் உட்பட பாகுபாடு அன்றி சேவைகளை உபயோகிக்க உங்களுக்கு உரிமையுண்டு. தாய்பாலூட்டும் தாயாக உங்களுக்கு உரிமைகள் உண்டு. உதாரணமாக, உங்கள் குழந்தைக்கு பொது இடத்தில் தாய்ப்பாலூட்ட உரிமை உண்டு. உங்களை யாரும் உங்கள் குழந்தைக்கு பொது இடத்தில் தாய்ப்பாலூட்டவதை தவிர்க்கவோ அல்லது “மறைவான” இடத்துக்கு நகர்ந்து செல்ல சொல்லவோ முடியாது. ஸ்றோலருடன் நுழையவேமுடியாதபடியோ அல்லது தடை செய்வதோ சட்டத்தொகுப்பின் கட்டு மீறுவதாகும்.

## குடியிருப்பு

பாகுபாடு இன்றி ஒரு அபார்ட்மென்டை வாடகைக்கு எடுக்கவோ, குத்தகை அல்லது மற்றைய ஒப்பந்தத்தை கையொப்பமிடவோ உங்களுக்கு உரிமையுண்டு. நீங்கள் கர்ப்பமாக இருப்பதாலோ, சற்று முன்னரே குழந்தை பெற்றெடுத்ததாலோ அல்லது கர்ப்பம் தரிக்கக்கூடியதாதாலோ உங்களுக்கு யாராவது வாடகைக்கு கொடுக்க மறுத்தால் அது சட்டத்துக் புரணானது. “வயதடைந்தவர் மட்டும்” ஆன கட்டிடங்கள் (வெறு குறிப்பிட்ட விதிவிலக்குகள் மட்டும்) சட்டத்துக் புரணானவை. உங்கள் குழந்தை பிறந்தபின் வீட்டுக்காரர் உங்களை “கூச்சலின்” பேரில் வேளியேற்றமுடியாது. அப்படி செய்வது குடும்பத்தகுதி மீதான பாகுபாடு என கருதப்பட்டு *சட்டத்தொகுப்பின்* கட்டு மீறுதலாகும். சிறு குழந்தைகள் உள்ள குடும்பங்களில் ஓரளவுக்கு கூச்சல் எதிர்பார்க்கவேண்டியதுதான், பக்கத்துவீட்டுக்காரர்கள் மீதான பாதிப்பை குரைக்க முடிந்த முயர்ச்சி எடுக்கும்வரை.

## உங்கள் உரிமைகளை பாதுகாப்பது

உங்கள் உரிமைகள் கட்டு மீரப்பட்டதாக நீங்கள் நம்பினால், ஒன்டாரியோ ஹ்யூமன் ரைட்ஸ் ட்ரைப்யூனலிடம் விண்ணப்பத்தாக்கல் செய்யலாம்.

## விண்ணப்பத்தாக்கல் செய்வது

ஒன்டாரியோ *மனித உரிமை சட்டத்தொகுப்பின் கீழ்* பாகுபாடு செய்யப்பட்டதாக கோறும் தாக்கல்கள் அனைத்தையும் ஒன்டாரியோ ஹ்யூமன் ரைட்ஸ் ட்ரைப்யூனலிடம் விண்ணபத்தாக்கல் செய்யலாம். மத்தியஸ்துவம் அல்லது வழக்குத்தீர்ப்பின் மூலம் ட்ரைப்யூனல் விண்ணபத்தாக்கல்களை தீர்க்கிறது. ட்ரைப்யூனலை (மேல் முறையீட்டை கேட்க அமர்த்தபடும் நீதிபதிகள் கூட்டம்) கீழ்வருவனைக்காக அனுகலாம்:

- பாகுபாடு செய்யப்பட்டதாக கோறும் தாக்கல்கள் செய்ய விண்மப்பங்களுக்கு
- பாகுபாடு செய்யப்பட்ட உங்கள் அனுபவத்தை பற்றி ஒரு விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய வழிகாட்டுதல்
- பாகுபாடான நடத்தைப்பற்றி விண்ணபத்தை எடுத்துவரும் செய்முறை பற்றிய தகவல்

Human Rights Tribunal of Ontario
(ஒன்டாரியோ ஹ்யூமன் ரைட்ஸ் ட்ரைப்யூனல்)
655 Bay Street, 14th floor
Toronto, ON M7A 2A3
Local(தொலைபேசி): (416) 326-1312
Toll Free (கட்டணமில்லா தொலைபேசி): 1-866-598-0322
TTY (Local) (காது கேளாதவருக்கு டேலிடைப்): (416) 326-2027
TTY (Toll Free) (காது கேளாதவருக்கு இலவச டேலிடைப்): 1-866-607-1240
Fax (தொலை நகல்): (416) 326-2199
Fax (Toll Free) (கட்டணமில்லா தொலை நகல்): 1-866-355-6099
www.hrto.ca

## உதவி நாடுவது

நீங்கள் பாகுபாடு அனுபவித்திருந்தாலோ அல்லது ஹ்யுமன் ரைட்ஸ் ட்ரைப்யூனல் ஆப் ஒன்டாரியோவுக்கு விண்ணப்பம் தாக்கல் செய்ய சட்டரீதியான உதவி தேவைப்பட்டாலோ, அல்லது *மனித உரிமை சட்டத்தொகுப்பின் கீழ்* ஒரு பாகுபாட்டு வழக்கெழுப்பை தீர்க்க சட்டரீதியான ஆலோசனை தேவைப்பட்டாலோ சட்டம் சார்ந்த உதவி மையத்தை அனுகவும்.

Human Rights Legal Support Centre
(மனித உரிமைகள் சட்டம் சார்ந்த உதவி மையம்)
400 University Avenue, 7th Floor
Toronto, Ontario M7A 1X8
Tel (தொலைபேசி): (416) 314-6266
Toll Free (கட்டணமில்லா தொலைபேசி): 1-866—625-5179
TTY (காது கேளாதவருக்கு டேலிடைப்): (416) 314-6651
TTY Toll Free (காது கேளாதவருக்கு இலவச டேலிடைப்): 1-866 612-8627
www.hrlsc.on.ca

உங்களுக்கு ஒரு நேர்முக பேட்டி வேண்டுமென்றால், நீங்கள் எங்களை மேலுள்ள தொலைபேசி எண்களில் அழைக்கவும். நீங்கள் டோரான்டோ மாநகர வட்டாரத்திற்கு வெளியே வசித்தால், எங்களை அனுகுங்குள், உங்கள் தேவைகளை எப்படிநிறைவேற்றலாம் என கலந்தாலோசிக்கலாம். உங்களுக்கு உங்கள் சமுகத்தில் தகுந்த சேவை அளிக்க நாங்கள் எல்லா முயர்சியையும் எடுப்போம். 140க்கு மேலான மொழிகளில் நாங்கள் சேவை அளிக்கிறோம்.

## மேலதிக தகவல்

*மனித உரிமை சட்டத்தொகுப்பை* பற்றி தி ஒன்டாரியோ மனித உறிமை கமிஷன் பொது தகவல் கொண்டுள்ளது. குறிப்பாக, கர்ப்ப நிலை மற்றும் தாய்பாலூட்டுவது மற்றும் குடும்பத்தகுதிப் பற்றிய ஆவணங்களை அவர்களின் www.ohrc.on.ca என்ற இணையதலத்தில் படியுங்கள்.


Ontario Human Rights Commission
(தி ஒன்டாரியோ மனித உறிமை கமிஷன்)
180 Dundas Street W., 7th Floor
Toronto, ON M7A 2R9
Local (தொலைபேசி): (416) 326-9511
Toll Free (கட்டணமில்லாத தொலைபேசி): 1-800-387-9080
TTY (Local) (காது கேளாதவருக்கு டேலிடைப்): (416) 314-6526
TTY (Toll Free) (காது கேளாதவருக்கு இலவச டேலிடைப்): 1-800-308-5561


---


*இந்த ஆவணம் ஆக்ஸஸ் அலையன்ஸ் மல்டிக்கல்சுரல் ஹெல்த் அண்டு கம்யூனிடி ஸெர்விஸஸுடன் ஒன்று சேர்ந்து மனித உரிமைகள் சட்டம் சார்ந்த உதவி மையத்தினால் ஆக்கப்பட்டது* (2009).


**மனித உரிமைகள் சட்டம் சார்ந்த உதவி மையம்**

Access Alliance
Multicultural Health and Community Services